# அமைதிப் பேச்சு முடங்கல் நிலை நீடிக்கும்:

## பி.பி.ஸி. தெரிவிப்பு

(லண்டன்)

அரசும் - புலிகளும் ஒருவரை ஒருவர் சொற்சாடல்களாலும் மழுப்பல்களாலும் தாக்குவதை காணும் பொழுது இப்போதைக்கு அமைதிப் பேச்சில் ஏற்பட்டுள்ள முடங்கல் நிலை நீடிக்கும் என்பதை தவிர வேறு எதுவும் புலனாகவில்லை என்று என்று பி. பி ஸி. தெரிவித்தது.

இதேவேளை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான அமைதிப் பேச்சு இன்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 17 இதழ் 19
யாழ்ப்பாணம் புதன்கிழமை 01-3-1995

## தலைவரின் கடிதத்திற்கு பதில் எழுத அரசு முயற்சி

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடந்த 25ம் திகதி எழுதிய கடிதத்திற்குப் பதில் அனுப்புவதற்கு. அரசு தரப்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக பி, பி. ஸி தெரிவித்தது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலர் திரு. பலபெத்தபெண்டி தெரிவிக்கையில்; ஜனாதிபதியும், அவரது ஆலோசகர்களும் விடுதலைப் புலிகள் தலைவரின் கடிதத்திற்குத் தகுந்த பதிலளிப்பதற்குப் பேச்சுக்கள் நடத்துவதாகத் தெரிவித்தார். -ரி

# புலிகளின் பாதுகாப்பிலுள்ள 16 போர்க்கைதிகள் இன்றுமுதல் சாகும்வரை உண்ணாவிரதம்!

## தமது விடுதலைக்கு உதவுமாறு அரசிடம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கடந்த ஐந்து வருடங்களாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருக்கும் போர்க் கைதிகளான 15 சிறிலங்கா பொலிஸாரும் இராணுவ சிப்பாய் ஒருவரும் தம்மை விடுதலை செய்வதற்கேற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்து இன்று சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

இன்று காலை 8-00 மணிக்கு இந்த உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த உண்ணாவிரதம் தொடர்பாக, கைதிகளில் ஒருவரான டி. ஜி. தர்மரத்ன (அம்பாறை) என்பவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில் கூறியதாவது: இன்று நாம் ஆரம்பிக்கும் சாகுவரையான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக அரசுக்கு அறிவித்துள்ளோம். இது குறித்து எமக்குப் பதில் எதுவும் அர

(4ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் இருக்கும் போர்க் கைதிகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

இன்று முதல் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் போர்க் கைதிகளின் விபரம் வருமாறு:

டி.ஜி தர்மரத்ன-அம்பாறை
உபாலி நிசங்க-அம்பாறை,
டபிள்யூ. ஆர். ஜீவகரத்ன-திருமலை. நிமால் ரட்ணசிறி ஜெய

(4ம் பக்கம் பார்க்க)

## 100 கடிதங்கள் எழுதியும் அரசிடமிருந்து பதிலில்லை

(யாழ்ப்பாணம்)

எமது நிலை தொடர்பாக இதுவரையும் நூறுக்கு மேற்பட்ட கடிதங்கள் அரசுக்கு எழுதியுள்ளோம் ஆனல் இது வரையும் எமது விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று போர்க்கைதிகள் கவலை தெரிவித்தனர்.

எவருடைய நிர்ப்பந்தத்தின் பேரிலும் நாம் இன்று

(4ம் பக்கம் பார்க்க)

## 'பொருளாதார தடையை நீக்கி எமது விடுதலைக்கு உதவவும்'

### கைதிகள் அரசுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மீதான பொருளாதாரதடையை முற்றாக நீக்கி தமது விடுதலைக்கு உதவுமாறு விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலிருக்கும் 16 யுத்தக்கைதிகளும் தமது உண்ணாவிரதம் தொடர்பாக சிறிலங்கா அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக்கடிதத்தின் பிரதிகள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, பொலிஸ்மா அதி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு — பூநகரிக்கு ஜெரி சில்வா விஜயம்

(கொழும்பு)

ஆனையிறவு பூநகரி இராணுவ முகாம்களுக்கு இராணுவ தளபதி ஜெரி டி சில்வா நேற்றுமுன்தினம் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

இராணுவ அதிகாரிகள் சகிதம் ஆனையிறவு வீதி, பூநகரி வீதிபோன்றவற்றையும் படையினரின் பாதுகாப்பு அரண்களையும் அவர் பார்வையிட்டார்.

இந்த இரண்டு முகாம்களில் உள்ள இராணுவ அதிகாரிகளுடன் திரு. ஜெரி டி சில்வா நீண்ட நேரம் உரையாடினர்

இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் விடுதலைப்புலிகளும் இராணு

(4ம் பக்கம் பார்க்க]

## கிளாலி - பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ராணுவ அதிகாரிகள் இரகசிய கூட்டம் குறித்து விசாரணை

[கொழும்பு]

கடந்த ஆகஸ்ட் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கக்கூடிய அறுதிப்பெரும்பான்மை கிடைக்காவிட்டால் மாற்றுத் தலைமைத்துவத்தை ஏற்படுத்துவது பற்றி ஆராய முன்னாள் இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பில் இரகசியமாகக் கூடியதென புலன் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

தேர்தலுக்கு முன்னர் இக்கூட்டம் நடத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## பேச்சு மந்த நிலையால் பொருளாதாரம் பாதிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் இடம் பெறும் பேச்சு வார்த்தையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள மந்த நிலையானது இலங்கையின் பொருளாதாரத்தை பாதிப்படையச் செய்யலாம் என பொருளாதார நிபுணர்கள் கொழும்பில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடமாகாணம் முழுவதும் ஆறுமாதத்துக்குள் மின்சாரம்

(கொழும்பு)

வடமாகாணத்தின் சகல பகுதிகளுக்கும்ஆறுமாதகாலத்திற்குள் மின்சாரம் வழங்கப்படும் என்று வடபகுதிக்கான புனரமைப்புக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதிக்கான புனரமைப்புத் திட்டத்தின்படி, முதலில் யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம் வழங்கப்படும். பின்னர் படிப்படியாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு,

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1397)


## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் த. முத்துக்குமாரசாமி தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் பொ. வீரபத்திரனும், சிறப்பு விருந்தினராக தமிழீழ வாகனப் பிரிவு பொறுப்பாளர் சி. அருள் ஆகியோரும் கலந்துகொள்வர். க

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-03-01**

**புதன் இரவு**

08-01 குயிலோசை - நிகழ்ச்சியில் ந. கிருஷ்ணு எழுதிய ''மட்டுநகர் கவி மணக்கும் நாடு''
08-20 ஏர்முனை - நிகழ்ச்சியில் ''சங்கமமாகிறது'' குறுநாடகம்
08-30 செய்திகள்
08-40 நாடகம் - சு. சிவராசா எழுதிய ''திருப்பம்''

**1995-03-02**

**வியாழன் காலை**

07-02 மாவீர வணக்கம்
07-15 விடுதலை கீதங்கள்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-01**

**புதன் மாலை**

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 படப் பாடல்கள்
05-30 அறிவூற்று - சமூகக் கல்வி புவனேந்திரன், விஞ்ஞானம் ஈசன்
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-15 விளையாட்டுச செய்திகள்
06-20 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# யுத்தத்தை நோக்கிச் செல்ல அரசை அனுமதிக்கமாட்டோம்

### — வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

''அரசு மீண்டும் ஒரு யுத்தத்தை நோக்கிச் செல்லுமானால் அதனை முறியடிக்கும் வகையில் நாம் செயற்படுவோம்'' இவ்வாறு திரு. வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

வாசுதேவநாணயக்காரவின் மேற்படி கூற்று ஆளும்கட்சி வட்டாரங்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய அரசு பற்றி திரு வாசுதேவநாணயக்கார மேலும் கருத்துத் தெரிவிக்கையில,

தற்போதைய அரசு கடந்த 17 வருடமாக பதவியிலிருந்த ஐ. தே கட்சியின் சட்டமைப்பின் கீழ்தான் செயற்பட்டு வருகின்றது. ஐ. தே. கட்சி ஆட்சியில் வேலை பறிபோனவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படுமென்று கூறிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

வடபகுதி மக்கள் தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். சமாதானத்தை கொண்டு வருவதாக அரசாங்கம் மக்களுக்கு கொடுத்த உறுதிமொழியை இதுவரை நிறைவேற்றவில்லை என்றும் தெரிவித்தார். வி-சி

## மாதாந்த உதவிப் பணம்

(பானிப்பாய்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும், காசநோய், தொழுநோய், புற்றுநோய் ஆகியவற்றிற்கான உதவிப் பணம் பெறுபவர்களினதும் டிசம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. -71


# விஞ்ஞான பீடம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பாடவிதான அலகுகளுக்கான பரீட்சைகள் சித்திரை வைகாசி 1995 அளவில் நடைபெறவுள்ளன பரீட்சை விண்ணப்பப் பத்திரங்கள் 31-03-1995க்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

1. விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு இரண்டாவது அரையாண்டு 1993/94

| | | |
|---|---|---|
| தாவரவியல் | — | BTG 11, BTG 12, BG 13 |
| இரசாயனவியல் | — | CHG 11, CHG 12, CHG 14, CG 13 |
| விலங்கியல் | — | ZOG 11: ZOG 12, ZC 11 |
| கணணி விஞ்ஞானம் | — | CSG 13, CSG 14 |
| பௌதீகவியல் | — | PHG 11, PHG 13, PG 13 |
| தூய கணிதம் | — | MPG 12, MPG 13, PMG 11 |
| பிரயோக கணிதம் | — | MAG 12, MAG 13, AMG 12 |
| புள்ளிவிபரவியல் | — | MSG 13, MSG 14, STG 12 |

2. விஞ்ஞானத்தில் இரண்டாம் தேர்வு முதலாவது அரையாண்டு 1993/94

| | | |
|---|---|---|
| தாவரவியல் | — | BTG 23, BTG 22, BG 23 |
| இரசாயனவியல் | — | CHG 23, CG 27 |
| விலங்கியல் | — | ZOG 21, ZOG 22, ZG 21 |
| கணணி விஞ்ஞானம் | — | CSG 22. CSG 24 |
| பௌதீகவியல | — | PHG 21, PG 24 |
| தூயகணிதம் | — | MPG 22, PMG 21 |
| பிரயோக கணிதம் | — | MAG 22, AMG 24 |
| புள்ளிவிபரவியல் | — | MSG 23, STG 21 |

3. விஞ்ஞானத்தில் மூன்றும் தேர்வு முதலாம் அரையாண்டு 1993/94

| | | |
|---|---|---|
| தாவரவியல் | — | BTG 33' BTG 34, BG 32 |
| இரசாயனவியல் | — | CHG 31, CHG 34, CG 35, CG34 |
| விலங்கியல | — | ZOG 31, ZOG 32, ZG 31 |
| கணணி விஞ்ஞானம் | — | CSG 31, CSG 32 |
| பௌதீகவியல | — | PHG 32, PG 33 |
| தூயகணிதம் | — | MPG 31, MPG 34 PMG 32 |
| பரயோக கணிதம் | — | MAG 32, AMG 32 |
| புள்ளிவிபரவியல் | — | MSG 31, MSG 33, STG 31 |

1993/94 கல்வியாண்டில் விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வுக்கு மீள் பரீட்சார்த்திகளாகத் தோற்றவுள்ள மாணவர்கள் 1995 சித்திரை/வைகாசி மாதத்தில் நடைபெறும் பரீட்சையிற் பொருத்தமான அலகுகளுக்கு தோற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் மிகுதி அலகுகளுக்கான பரீட்சைகள் 1995 ஐப்பசி/கார்த்திகை மாதத்தில் நடைபெறும். மேலதிக விபரங்களை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

—பதிவாளர்

(எ 4805)



யாழ். பல்கலைக்கழகம், இலங்கை

## மரத்தளபாட விநியோகத்திற்கான

# கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு கீழ்க் குறிப்பிட்ட மரத்தளபாடப் பொருட்களை வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. | விரிவுரை மண்டப கதிரைகள் (Lecture Hall Chairs) | — 75 |
| 02. | விரிவுரை மண்டப மேசைகள் 1200 மி. மீ. X 600 மி. மீ. (Table for Lecture Room) | — 12 |
| 03. | நிர்வாக உத்தியோகத்தர் மேசை (Executive Table) | — 19 |
| 04. | கண்ணாடி முகப்பிலான அலுமாரிகள் (Glass fronted Almyrah) | — 16 |
| 05. | ஒரு லாச்சியுடன் கூடிய மேசை (Table with 01 Drawer) | — 04 |
| 06. | மகாநாட்டு மேசை (Conference Table — 10' X 4') | — 01 |
| 07. | மகாநாட்டு மேசைக் கதிரைகள் (Conference Table Chairs) | — 10 |
| 08. | கையுடன் கூடிய பின்னல் கதிரை (Rattaned arm Chairs) | — 73 |
| 09. | தட்டெழுத்தாளர் முக்காலி (Typist Stool) | — 08 |
| 10. | பக்க ராக்கை (Side — rack) | — 08 |
| 11. | மரவாங்குகள் (Wooden Benches) | — 02 |
| 12. | திறப்புகளுக்கான கபினெற் (Key Cabinet) | — 01 |
| 13. | காரியாலய மேசை ($4\frac{1}{2}$ X '$3\frac{1}{2}$ Office Table) | — 05 |
| 14. | புறுக்கூட்டையொத்த ராக்கை (Pigeon Hole rack) | — 02 |
| 15. | நேர் நாற்காலி (St. Back Ch irs) | — 14 |
| 16. | பரிசோதனைக் கூட முக்காலி (Laboratory Chairs) | — 05 |
| 17. | விரிவுரை மண்டப கதிரைகளுக்கான கைதாங்கல்கள் (Hand rest for Lecture Hall Chairs) | — 50 |

மேற்படி தளபாடங்களுக்கான வரைபடங்களையும், ஏனைய விபரங்களையும் 07-03-95 ற்கும் 09-03-95ற்கும் இடையில் அலுவலக நேரத்தில் யாழ். பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இவற்றைப் பெற விரும்புவோர் மீளளிக்கத் தகாத வைப்புப் பணமாக ரூபா 250/-ம் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 5000/-ம் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 17-03-95 காலை 10-00 மணிக்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''மரத்தளபாடங்கள் வழங்கலுக்கான கேள்விப்பத்திர விண்ணப்பம்'' என தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் காலை 10-30 மணிக்கு திறக்கப்படும்,

பதிவாளர்

(எ-4802)

### மணிவாக்கு

தியவனின் சிரிப்பு இனிப்பாக இருக்கலாம். இனிப்பு மிகையானல் அது நோயை விளைவிக்கும். நல்லவனின் கோபம். கசப்பாக இருக்கலாம் கசப்பான மருந்துகள் நோயைத் தீர்க்கும்.

— அர்த்தசாஸ்திரம்

## நமது நோக்கு

### படிக்கவேண்டிய பாடம்

பிரித்தானியாவின் பிரித்தாளும் தந்திரம் வெற்றிதரவில்லை. அதற்கு மாருகப் பல பிரச்னைகளைத் தான் தோற்றுவித்தது என்பதை அந்தநாடு உணர்ந்து கொண்டது! என இந்திய வானெலியின் செய்திப்பிரிவுச் கண்ணேட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

வட அயர்லாந்தில் பிரச்னை தொடர்பாகப் பிரித்தானிய அயர்லாந்து அரசுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றிய அக் கண்ணேட்டம் ஒலிபரப்பட்பட்டது.

அயர்லாந்து விடுதலைப் போராட்டம் நடாத்தி வெற்றிகண்டது. அந்த நாட்டில் 32 மாவட்டங்கள் இருந்தன. வட அயர்லாந்தில இருந்த ஆறு மாவட்டங்களைப் பிரித்தானிய அரசுபிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்தித் தன்வசம் வைத்திருந்தது.

அங்கு வாழ்ந்து வந்த புரட்டஸ்தாந்து மக்களின் ஆதரவோடு அப்பகுதியின் கத்தோலிக்க மக்களை அடிபணிய வைக்கலாமென கணிப்பீடு செய்தது,

ஆனல் - அடக்கப்பட்டவர்கள் சும்மா இருக்கவில்லை. கிளர்ச்சிகள் செய்தார்கள். தமது தாயகப் பகுதியோடு இணைய வேண்டும் என்ருர்கள்

கிளர்ச்சிகள் - குண்டு வெடிப்புகள் பிரித்தானியாவிற்குள்ளேயே நடந்தன.

விடுதலைப் போரைக் கொச்சைப்படுத்தி பயங்கரவாதம் என முலாம்பூசி உலகெங்கும் செய்த பிரசாரம் வெற்றிதரவில்லை என இப்போது பிரித்தானியா உணர்ந்துள்ளது.

இங்கு-அங்கு ஏற்பட்ட ஒப்பந்தம் இலங்கைக்கு நல்ல பாடமாக அமைய வேண்டும்.

குறிப்பாக இரு விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும்.

ஒன்று — உண்மையான விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் என மூடி மறைத்துப் பிரசாரம் செய்வதால் நாடு சீரழியுமேதவிர நன்மை கிட்டாது.

இரண்டாவதாக— ஒரு தாயகப் பகுதிக்குள் குடியேற்றங்கள் மூலம் ஊடுருவல் செய்து பின்னர் பிரித்தாளலாம் என்ற தந்திரம் வெற்றியளிக்கும் என்ற காலம் மாறிவிட்டது!

# ஒற்றையாட்சி முறையால் இனப் பிரச்னையை தீர்க்க முடியாது

— நீலன் திருச்செல்வம் கூறுகிருர்

(கொழும்பு)

இதுவரை காலமும் இருந்து வந்த ஒட்றையாட்சி முறையினல் இனப்பிரச்னைக்கு தீர்வு காணமுடியாது. ஒற்றையாட்சி அற்ற ஒரு சாசனத்தினல்தான் இப்பிரச்னைக்குத் தீர்வுகாணமுடியும்.

இவ்வாறு த. வி கூட்டணி எம்.பி கலாநிதி நீலன் திருச்செல்வம் வெள்ளவத்தை இராமகிருஷ்ணன் மிஷனில் இடம்பெற்ற வைபவமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:

நடைமுறையில் இருக்கும் ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் இனப்பிரச்னைக்கு தீர்வு காணமுடியாது. தேசிய அடிப்படையிலா, மாகாண அடிப்படையிலா தீர்வுகாண வேண்டும் என்பதை ஆராய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. 1972, 78 ஆகிய காலங்களில் கொண்டுவரப்பட்ட அரசியல் சாசனத் திருத்த குழுவில் சிறுபான்மை இனத்தவர்கள் இடம்பெறவில்லை. ஆனல் இன்றைய அரசியலமைப்பு திருத்த ஆலோசனைக் குழுவில் தமிழ் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதனல் இந்த நாட்டில் தமிழர்களின் உரிமைகள் அரசியல் யாப்பில் தெளிவாக்கப்பட வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

நேரடிப் பேச்சுவார்த்தை மூலம்தான் இனப்பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும். பேச்சுவார்த்தையின் மூலம்எடுக்கும் முடிவுதான் அரசியல் சாசனத்திலும் இடம்பெற வேண்டும் இதன்மூலம் அரசியல் தீர்வு ஏற்பட இடமுண்டு.

இன்று உருவாகவிருக்கும் அரசியல் சாசனத்தில் நாமும் பங்காளிகளாகின்ருேம். வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு இதில் தீர்வுகாணத்தக்க வரைவுகள் இடம்பெற வேண்டியது அவசியம். தேசிய இனங்களின் தனித்துவம் எப்படி பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விடயங்கள் முக்கியமாக இந்த சாசனத்தில இடம்பெற வேண்டும்.

அவசரகாலப் பிரகடனத்தால் வலதுகையால் வழங்கப்படும் மனித உரிமை இடது கையால் பறிக்கப்படுவது போல் உள்ளது இந்த நிலை மாற வழிகாண வேண்டும். 1947ல் சோல்பரி அரசியல் யாப்பிற்கு தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் மட்டுமே. அரசியல் சட்டம் உருவாகும்போது பல இனமக்கள் வாழும் நாட்டில் இனவிகிதாசார முறைகள் இடம்பெற வேண்டியது இனப்பிரச்னைத் தீர்வுக்கும் அவசியம். இலங்கை அரசியல் இனங்களின் ஐக்கியத்திற்கு யாப்பு அண்மைக் காலத்திலேயே 16 முறை திருத்தம் மான எந்தவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. ஆனல் அப்போது இடம்பெறவில்லை என்ருர்.

### புலதும் பத்தும்

#### இருமல்

மூச்சுக்குழல், மூச்சுக்கிளைக் குழல் ஆகியவற்றிற்குள் தேவையற்ற பொருள் உட்சென்ருல் அதனை அகற்ற ஏற்படும் தற்காப்பு நிகழ்ச்சியே இருமல். தூசு, சோற்றுப் பருக்கை போன்றவை உட்செல்வதால் ஜலதோஷம் ஏற்படுவதற்கான ஒரு காரணம்.

இருமல் தீங்கற்றது. ஆனல்... இருமலுடன் நெஞ்சு வலியும் இருந்தால் இதய நோயின் வெளிப்பாடகவும் இருக்குமல்லவா? இடைவிடாத இருமல் நாட்பட்ட இருமல் வரப் போகும் தீமைக்கு முன் எச்சரிக்கையாகவும் இருக்கலாம்.

புகைபிடிப்பவர்களின் இருமல பயப்பட வேண்டிய சங்கதிதான் நுரையீரலைப் பாதித்து அதன் முக்கிய பணியான வாயுப் பரிமாற்றத்திற்கு இடையூறு விளைவிக்குமாம்!

— மயூரன்

## இராசி பலன்

01-03-1995

புதன்கிழமை

(தமிழுக்கு மாசி –17)

அமாவாசை: மாலை 6-09 வரை, சதயம்: நள்ளிரவு 12-08 வரை, அமாவாசை விரதம், கரிநாள், சித்த யோகம், இராகுகாலம்: 12-28 முதல் 1-58 வரை, சுபவேளை: மாலை 4-58 முதல் 6-28 வரை.

மேடம்: வயோதிபர் ஆசி, கடமை உணர்வு, தியாகம்.

இடபம்: திருமணயோகம், பெருமை பேசுதல், பணப் புழக்கம்.

மிதுனம்: மாமனர் தொல்லை, தொழில் பாதிப்பு, யோசனை.

கடகம்: பழிவாங்கப்படல், முரண்பாடு, மனவேதனை.

சிங்கம்: சத்தியம் காத்தல், விருந்தினர் வருகை, பாராட்டு.

கன்னி: தெய்வீகப் பணி, கற்பனைமிகுதி, பயணம்.

துலாம்: துன்பப்படல், பெண் பகை, குழம்பித்தெளிதல்.

விருச்சிகம்: விதண்டாவாதம், அதிகரிகள் சினம், மனக்கவலை.

தனுசு: இனியசம்பாஷனை, அதிக பிரயாசம், குடும்ப சுகம்.

மகரம்: மனைவிதுயர், வைத்திய செலவு, தவருன செயல்.

கும்பம்: பழைய நினைவு, முகஸ்துதி, வாக்குவன்மை.

மீனம்; குற்ற உணர்வு, தொழில் கவலை, மனச்சஞ்சலம்.

— ஜோஸ்யர்

### தவகால நற்சிந்தனை

#### திருநீற்றுப்புதன்

''கடவுளோடு ஒப்புரவாகுங்கள்: இதோ ஏற்புடைய காலம் இதுவே...'' (2 கொரி 6:2)

கடவுளோடு நாம் ஒப்புரவாவதற்கு உரிய காலம் இன்றுடன் ஆரம்பமாகின்றது. இந்தக் காலம் எமக்குக் கிடைத்தற்கரிய காலமாகும். இறைவன் எம் மேற்கொண்ட அன்பினல் மீண்டும் ஒரு தவக்காலத்தைத் தந்துள்ளார். எமது பாவங்களுக்காக மனம் வருந்துவதோடுநாம்அவரை நோக்கிச் செல்வதற்கு மீண்டும் ஒரு அரிய, பெரிய சந்தர்ப்பத்தை தந்துள்ளார். இதனைத் தவறவிடாது தகுந்த முறையில் பயன்படுத்துவோம். நாங்கள் பாவம் செய்தோம். எம் மீது இரங்கும்படி வேண்டுவோம். பாவநட்டங்களை விட்டொழிப்போம். இறைவனேடு ஒப்புரவாகி வாழ்வோம்.

தா. மைதிலி

காட்டை அழிக்க நாடழியும்
கழனி செல்வமும் தாள் ஒடுங்கும்


## பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும்

எமது சங்கத்திற்கு கச்சேரியினல் ஒதுக்கப்பட்ட மாவின் அளவீட்டில் அரைவாசியை வழங்க கச்சேரி அதிகாரிகள் முடிவு செய்ததனல் அம்மாவினைக் கொண்டு வெதுப்பி உற்பத்திசெய்தால் பொது மக்களின் தேவையைபபூர்த்தி செய்ய முடியாது என்ற காரணத்தால் நாம் அதனைக் களஞ்சியத்திலிருந்து எடுப்பதற்கு பின்நின்ருேம்.

எம்மீது சுமத்தப்படும் தேவையற்ற விமர்சனங்களைத் தவிர்ப்பதற்காகவும் தொடர்ந்து எமக்கு சீரான மாவின் விநியோகத்தை உறுதி செய்வதற்காகவும் நாம் எடுத்த முடிவானது முழுக்க முழுக்க பொதுமக்களின் நன்மை கருதியே ஆகும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

இதனல் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருத்தம் தெரிவிக்கின்ருேம்.

★ வெதுப்பிக்காக வேறு பொருட்களைக் கட்டாயப்படுத்தி விற்கும் வியாபாரிகளுக்கு அந்தந்த வெதுப்பகத்தினல் வெதுப்பி விநியோகம் தடைசெய்யப்படும்

**யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்**

183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,

(ஏ-4806)


## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி புவனேஸ்வரி அரியராசா (B. A.)

(ஆசிரியை, யா/தாவடி இ. த. க. பாடசாலை)

| பிறப்பு: | இறப்பு: | திதி: |
|---|---|---|
| 30-09-1941 | 14-02-1991 | 01-03-1995 |

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவே
அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையிலே
உன்னை இழந்தோம் மனம் துடித்தோம்
அளவில்லாக் கண்ணீரை விழிதனிலே நிறைத்துவிட்டு
அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீரோ
ஆண்டுகள் நான்கு உருண்டோடி போய்விட்ட போதிலும்
நீர் எமக்கு ஆறுதலைச் சொல்லிவைக்க வந்திடுவீர்

உங்கள் ஆத்ம சாந்திக்காக
எந்நாளும் பிரார்த்திக்கும்:

''ஜெயந்தம்'',
தாவடி தெற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்

(சி-1405)

# இந்திய, பிரிட்டன் ராணுவம் போன்று இலங்கைப் படையும் புனரமைப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மந்த நிலையை அடைந்து வருவதாக தற்போது தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் குறை கூறும் இதே வேளை புலிகள் கிழக்கில் யுத்தத்திற்கு தயாராகி வருவதாக அரசு தரப்பு கூறியுள்ளது.

இந்த நிலையில் இரண்டாவது யுத்தத்திற்கு பின்னர் மீண்டும் இதுபோன்றதொரு நிலை ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுக்கும் வகையில் இலங்கை இராணுவம் புனரமைக்கப்படுவதாகவும் இப்பணிகளில் இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா முழுமூச்சாக ஈடுபடுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கையில்: இதுவரை காலமும் இலங்கை இராணுவத்தில் மேஜர் ஜெனரல் 4 பேர் மட்டுமே இருந்துள்ளனர். புதிய புனரமைப்பின் மூலமாக மேஜர் ஜெனரல்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது. இதன்படி வடக்கே இராணுவ பிரிவு இரண்டிற்காக விசேட படை பிரிவுகள் நான்கு அமைப்பதாகவும் இந்நான்கு பிரிவுகளுக்கும் நான்கு மேஜர் ஜெனரல்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் தரத்தினை இந்திய, பிரிட்டன் இராணுவ தரத்திற்கு உயர்த்தத் தமக்கு அனுமதி வழங்குமாறு இராணுவ தளபதி ஜெரி டி சில்வா உட்பட அவருக்கு சார்பானவர்கள் பலரும் அரசை கேட்டுக்கொண்டனர். இதற்குப் புதிய அரசும் அனுமதியளித்ததை தொடர்ந்தே இராணுவம் தரமுயர்த்தப்பட்டு வருகிறது.

இதற்கமைய பல இராணுவ பிரிவுகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இந்த இராணுவ புனரமைப்புக்கு எதிராக இராணுவத்திற்குள்ளேயே பல எதிர்ப்புக்குரல்கள் எழுந்துள்ளன. முன்னாள் இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்னவுக்குச் சார்பானவர்களே இவ்வாறு எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றனர்.

1993-ம் ஆண்டின் இறுதியில் சிசில் வைத்தியரத்னவால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவினால் குற்றம் சாட்டப்பட்ட பலரே மேற் கூறிய மேஜர் ஜெனரல் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக ஜாலிந்த நம்முனி, கெமுனு குலதுங்கா, அசோகா ஜெயவர்த்தன போன்ற பிரிகேடியர்கள் பூநகரித் தாக்குதல் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் மூலமாக குற்றம் சாட்டப்பட்டவர்களே. இதன்படி இவர்களுக்கு பதவி உயர்வு வழங்கக் கூடாதென முடிவு செய்யப்பட்டிருந்தது.

எதிரி வளர்ந்துவரும்போது அதற்கேற்ப இராணுவத்திலும் வளர்ச்சியை செய்யவே இந்த புனரமைப்பு நடவடிக்கை என இராணுவ தளபதி ஜெரி கருதுகிறார்.

இதற்கிடையில் மேலதிக பயிற்சிக்காக மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன இங்கிலாந்துக்கும். மேஜர் ஜெனரல் வீ. கே. தசநாயக்க ஜேர்மனுக்கும் சென்றுள்ளனர். -சி

## பென்ஷன் வவுச்சர்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் மார்ச்'' மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்கள் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவுக்கு நேற்று வந்து சேர்ந்தன.

இத்துடன் தேசிய அடையாள அட்டைக்குரிய விண்ணப்பபடிவங்களும், உணவு முத்திரைபபடிவங்களும் புதிய ஜெனரேற்றர் ஒன்றும் எடுத்து வரப்பட்டுள்ளன. -71

## தட்டெழுத்து சுருக்கெழுத்து போட்டிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தட்டெழுத்து / சுருக்கெழுத்து போட்டிப் பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு சுண்டுக்குளி, கொழும்புத்துறை சாலையிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பயிற்சியகத்தில் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்து இதுவரை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் தமிழீழ நிர்வாகசேவை செயலகத்தில் இன்று மாலை 5-00 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும். (ரி)

## ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினரும் நேற்று முன்தினம் சந்தித்தனர் என்று ரூபவாஹினி தெரிவித்தது.

இச்சந்திப்பு நேற்றிரவு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டது. (ரி)

## வடமாகாணம்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும்.

வடமாகாணப் புனரமைப்புப் பணிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்குப் பல்வேறு வெளிநாடுகள் முன்வந்துள்ளன. இதற்கான புனரமைப்புத் திட்ட யோசனைகள், சம்பந்தப்பட்ட நாடுகளுக்குச் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம் வழங்குவதற்கென, பத்து ஜெனரேட்டர்களை இலங்கை மின்சார சபை ஒதுக்கியுள்ளது. இதில் இரண்டு ஜெனரேட்டர்கள் ஏற்கவே கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு ஜெனரேட்டர்கள் மூலம் யாழ். மாநகர சபை எல்லைக்குள் மின்சாரம் வழங்கமுடியும். பாரிய ஜெனரேட்டர்களைக் கப்பல் மூலம் கொண்டு செல்லமுடியாப் பிரச்னையும் எதிர்நோக்கப்படுகிறது.

வடமாகாணத்துக்கான புரனமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசித்துச் செயற்படுமாறு வடபகுதிப் புனரமைப்புக் குழுவுக்குப் பொறுப்பான அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

சுன்னாகத்தில் ஒன்பது மின் உலைகள் உள்ளன. அவை 14 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியன. இவற்றைத் திருத்தி அமைப்பதற்கு இங்கிலாந்தில் உள்ள கம்பனி நிபுணர் அழைக்கப்படவுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இடையில் மின்சாரத் திருத்த வேலைகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ். அரசாங்க அதிபர்கள் பாதுகாப்பு உறுதியை வழங்க வேண்டும் என இலங்கை மின்சார சபை கேட்டுள்ளது.

பாதுகாப்பு உறுதி கிடைத்ததும் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படும். ரி-இ

## புலிகளின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சிடமிருந்து கிடைக்கவில்லை. 7 நாட்கள் வரை தண்ணீர் அருந்தி இந்தப் போராட்டத்தைத் தொடர்வோம். 7 நாள் வரை அரசிடமிருந்து எமக்குச் சாதகமான பதில் கிடைக்காதுவிட்டால், தண்ணீர் அருந்தாமலே எமது போராட்டத்தைத் தொடர்வோம்.

நாம் ஆரம்பிக்கப்போகும் உண்ணாவிரதம் தொடர்பாக ஒரு கடிதம் அரசுக்கு உண்ணாவிரதம் ஆரம்பித்த பின்னரும் எழுதவுள்ளோம்.

இன்று அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் இடைநிறுத்தம் அமுலில் இருந்தபோதும், எமது விடுதலைப் பற்றி அரசு சிந்திப்பதாகத் தெரியவில்லை.

அரசுத் தரப்பில் சமாதானம் சமாதானம் என்று பேசப்படுகிறதே தவிர, சமாதானத்தை இன்னும் கொண்டு வர முடியவில்லை.

கடந்த ஐந்துவருடங்களாக நாம் யுத்தகைதிகளாக விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலிருக்கிறோம் ஏற்கனவே இரு தடவைகள் உண்ணாவிரதம் இருந்தும் எதுவித பயனும் இல்லை சந்திரிகா அரசாங்கம் வந்த பின்னராவது நாம் விடுவிக்கப்படுவோம் என்று எதிர்பார்த்தோம் ஆனால் அரசு அக்கறையின்றி இருக்கிறது.

சந்திரிகா பிரதமராக வந்த பிறகும் ஜனாதிபதியாக பதவி ஏற்ற பினனரும எமது விடுதலை தொடர்பாக அவருக்கு கடிதங்கள் எழுதினோம் ஆனால் அவற்றுக்குக்கூட எமக்குஎதுவித பதிலும் கிடைக்கவில்லை

எமது நிலை குறித்து இங்கு வந்த சமாதானக் குழுக்களிடமும் தெரிவித்தோம். அவற்றுக்கும் எமக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இருதடவைகள் உண்ணாவிரதம் இருந்து எமது உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து எம்மால் உண்ணாவிரதமிருக்க முடியாத நிலையிருந்தும் கூட எமது விடுதலைக்காக நாம் இந்த உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பிக்கிறோம்.

புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் எம்மை நல்ல முறையில் பராமரித்து வருவதுடன் எமது விடுதலைக்காக அரசுக்கு பலசந்தர்ப்பங்களை வழங்கியும் அரசு பாராமுகமாக இருக்கிறது.

எமது விடுதலை தொடர்பாக அரசு, சிங்கள மக்கள் மற்றும் படையினரும் உதவவேண்டும். சிங்கள மக்கள் எமது விடுதலை குறித்து அரசிடம் வலியுறுத்தவேண்டும். படைகள் எங்கள் நிலையைப் பற்றி நன்கு சிந்தித்து எங்கள் விடுதலைக்காக தடையாகஇருக்ககூடாது

தென்னிலங்கையில் வெளியாகும் பத்திரிகைகள் மற்றும் வெகுஜன தொடர்பு சாதனங்கள் எமது விடுதலை தொடர்பாக பெரும் பிரசாரம மேற்கொண்டு எமக்கு உதவவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். -சி-ரி

## இராணுவ அ[illegible]காரியின் உயர் பதவி பறிபோனது

[கொழும்பு]

இராணுவ புலனாய்வு இயக்குனர் செனவிரட்ண, அவரது பதவியிலிருந்து அகற்றப்பட்டு, இரத்தினபுரி மாவட்ட கொமாண்டராக நியமிக்கப பட்டுள்ளார்.

அண்மையில் இவர் அமெரிக்கா சென்றிருந்தபோது அமெரிக்க வாகன ஓட்டுனரான பெண்ஒருவர்மீது தகாத முறையில் நடந்துகொள்ள முயன்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதனாலேயே இவர் வகித்த பதவியிலிருந்து அகற்றப்பட்டு இரத்தினபுரி கொமாண்டராக நியமிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. -கே-இ

## பொருளாதார

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பர் பிராங் டி சில்வா ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் 16 யுத்தக் கைதிகளும் கையொப்பமிட்டுள்ளனர். இக்கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டது.

இக்கடிதம் தொடர்பாக அரசிடமிருந்து இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை என்றும் கைதிகள் தெரிவித்தனர். (சி ரி)

## பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார வல்லுநர்கள் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் புலிகள் - அரசுக்கு இடையிலான ஆரம்ப கட்டப் பேச்சு வார்த்தையையடுத்து இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டிய அந்நிய முதலீட்டாளர்கள் தற்பொழுது தயக்கம் காட்டி வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியுறும் அபாயமும் ஏற்பட்டுள்ளதால் இலங்கைக்கு அந்நிய செலாவாணியில் பாதிப்பும் ஏற்படலாம் என்றும் பொருளியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். [க-இ]

## 100 கடிதங்கள்

(1ம் பக்கத் தொடர்சசி)

உண்ணாவிரதப்போராட்டம் ஆரம்பிக்கவில்லை எமது விடுதலைக்காகவே நாம் இந்தப்போராட்டத்தை ஆரம்பிக்கிறோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா எமது விடுதலைக்கு உதவுவார் என்று எதிர்பாக்கிறோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். சி-ரி

## கல்விக் கல்லூரிகளில் இவர்களுக்கு அனும[illegible]

(கொழும்பு)

க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் கூடுதலான புள்ளிகளை பெற்று பல்கலைக் கழகங்களில் அனுமதிபெற முடியாத மாணவர்கள் கல்விக் கல்லூரிகளில் அனுமதிக்சப்பட இருக்கிறார்கள். இதற்கெனபரீட்சை எதுவும் நடத்தப்படமாட்டாது.

இந்தக் கல்லூரிகளில் தகுதி பெறும் ஆசிரியர்களுக்கு உயர் பயிற்சி வழங்கப்படும் என்று கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன கூறியுள்ளார்.

கல்வி நடவடிக்கைகள் சம்பந்தமாக தும்மலசூரிய ஜே. ஆர். ஜெயவர்க்தன ம. ம. வித்தியாலயத்தில்நடைபெற்ற மாநாட்டில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தொழில் நுட்ப மாணவர்களுக்கு தொழில் நுட்ப கல்லூரிகளுக்கு அருகேயுள்ள தொழிற்சாலைகளில் நடைமுறைப் பயிற்சி வழங்கப்பட இருப்பதாகவும் அமைச்சர் மேலும்சொன்னார். -கே

## அமைதிப் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னமும் முன்னேற்றம் காணும் என்று ஜனாதிபதியின் செயலாளர் திரு. பாலபத்தபென்டி தெரிவித்தார்.

அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தை எப்போது தொடங்கும் என்று அவரால் கூறஇயலவில்லை என்று பி. பி, ஸி தெரிவித்தது.

## உண்ணாவிரதம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தன-திருமலை, டபிள்யூ. உபுல் ஆனந்த சமன்திலக-கேகாலை. எம். டபிள்யூ. பிரியந்த மாத்தறை, சுனில் திசநாயக்க-அம்பாறை, நந்தன சமன்சிறி-அம்பாறை, சிசிர சாந்தபால-கேகாலை, ஆர். எம். கருணரட்ண-பதுளை. டபிள்யூ. சி. உபாலி-காலி, பி. என். குமாரா-அம்பாறை எச்.எம்.பியரட்ன-குருநாகல், எம். எம். கே. ராஜரட்ன-திருமலை, ஆர்.எம்.அனுரசாந்த அம்பாறை, டி.ஜி தர்மவர்த்தன-அம்பாறை.

சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கும் போர்க் கைதிகளில் ஒருவரான இராணுவச் சிப்பாய் டபிள்யூ. சி. உபாலி என்பவர்; 1991ம் ஆண்டு இடம்பெற்ற மோதல் ஒன்றில் கட்டைக்காடு பகுதியில் விடுதலைப் புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. சி-ரி

## ராணுவ அதிகாரிகள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்குப்பின்னர் பொ. ஐ. மு வுக்கும், ஐ. தே. க.வுக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் மாற்றுத் தலைமைத்துவத்தை ஏற்படுத்தும் நடைமுறைகள் பற்றி ஆராய்வதற்கே இவர்கள்கூடினார்கள் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

இந்த இராணுவ உயர்அதிகாரிகளை விசாரிப்பதற்கு விசேட குழு ஒன்றை அமர்த்தியுள்ளதாக புலன்விசாரணைகளுக்கு பொறுப்பாக இருக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் தற்பொழுது வசித்துவரும் முன்னாள் ராஜதந்திரி ஒருவர் இந்த சதி பேச்சு வார்த்தையில் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த அரசாங்கத்தின் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த இரு உயர் சிவில் அதிகாரிகள் ஆகியோரின் பெயர்களும் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-